பதிவு செய்யப்பட்டு, விசாரணையிலே உள்ளது. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும், ஓட்டுநர்களுக்குமிடையே நடந்த மோதலைப் பயன்படுத்தி, மாணவர்களைத் தாக்கிய நான்கு பேர் 22–3–1990 அன்று இரவே கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்.

சட்டக் கல்லூரி முதல்வர் 22, 23 ஆகிய நாட்கள் விடுமுறை என்று அறிவித்தார். இருப்பினும், காலையிலே வகுப்பிற்கு வந்த மாணவர்கள் சிலர் முதல் நாள் ஏற்பட்ட சமரச நடவடிக்கையிலே திருப்தி கொள்ளாமல், அவர்கள் உண்ணாவிரதம் தொடங்கினார்கள். இரவு 8 மணிக்கு உண்ணாவிரதம் இருந்த மாணவர்களில், மாணவிகள் 15 பேரும், மாணவர்கள் 35 பேரும் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள். வருவாய்த்துறை, காவல்துறையினர் இதுவரை எடுத்த நடவடிக்கைகளை எடுத்துக்கூறி, தொடர்ந்து சமரச முயற்சிகளிலே ஈடுபட்டு வருகின்றார்கள். தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செயயப்பட்டு வருகின்றன. இது அமைதிக்கு ஊனம் விளைவிக்காத வகையில், மாணவர்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் ஒரு சமரச உடன்பாட்டைச் செய்வதற்கு அதிகாரிகள் முயன்று வருகின்றார்கள். நல்ல முடிவு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

(இ) கோவையில் ஒரு முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்திப் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, அது தேவை என்று கருதப்பட்ட காரணத்தினால் மிகுந்த தயக்கத்தோடு நான் இங்கே அதனை எழுப்புகிறேன். அமைதிப் பூங்காவாக விளங்குகிற தமிழகத்தில் அண்மைக் காலத்தில் வன்முறைகள் தூண்டப்படக்கூடிய அளவிற்கு இனத் துவேஷங்கள் தூண்டப்பட்டு, அதன் காரணமாக, கொலை, கொள்ளை என்ற அளவிற்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதுவும் குறிப்பாக இனம் காட்டப்பட்ட ஒரு சில பகுதிகள் இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

(10–20 மணி)

அண்மையில் கோயம்புத்தூரில் திங்கட்கிழமை, 28 வயது மதிக்கத்தக்க ஒரு முஸ்லீம் இளைஞன், அதுவும் அரசுத் துறையிலே, மின் துறையிலே வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு இளைஞன் பிணமாக கலெக்டர் அலுவலகத்திற்குப் பின்னாலே கண்டெடுக்கப்பட்டான். அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறையாக எடுப்பதற்குப் பதிலாக, போலீஸ் துறை கூட, அந்தப் பிணத்தை அவன் சார்ந்துள்ள குடும்ப இடுகாட்டில் அடக்கம் செய்வதற்கு அவர்கள் கோரியபோது, அதை கூட அவர்கள் அனுமதிக்காத நிலையில் தேவையில்லாத ஒரு கொந்தளிப்பு அங்கே ஏற்பட்டிருக்கிறது. கோவையைப் பொறுத்தவரையில் லத்திப் என்கின்ற ஒரு இளைஞன் நல்ல கடை வீதியிலே ஜன நடமாட்டம் உள்ள ஒரு பகுதியில் 6 மாதத்திற்கு

முன்பு கொல்லப்பட்டான். அதற்குப் பிறகு, அக்கீம் என்ற ஒரு இளைஞன் இரவு நேரத்தில் கூட்டத்திற்குப் போய் திரும்பி வந்து கொண்டிருக்கிற அந்த இளைஞர் மிக படு பாதகமாகக் குத்தப்பட்டு கொல்லப்பட்டான். அதற்குப் பிறகு அண்மையில் வட கோவையில் இன்னொரு முஸ்லீம் இளைஞன் 2 மாதத்திற்கு முன்பு கொல்லப்பட்டு இருக்கிறான். இப்போது மீண்டும் திங்கட் கிழமை கலெக்டர் ஆபீசுக்குப் பின்னால் ஒரு முஸ்லீம் இளைஞனுடைய சவம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு இருக்கிற அக்கறையை நாங்கள் அறிவோம். ஆனால், எங்களைப் பொறுத்த வரையில் கோவையில் இருக்கக்கூடிய குறிப்பாக ரகசிய போலீஸ் துறை இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை பாரபட்சம் அற்ற நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரிய வருகிற உண்மை ஆகும். தயவு செய்து நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக்கேட்டுக்கொள்ளுவது வகுப்பு துவேஷம் கட்டவிழ்த்து விடப்பட்டு இருக்கிறது அந்தப் பகுதியிலே. இரண்டு சமுதாயங்களையும் சாராத நடு நிலையில் இருக்கிற போலீஸ் காரர்கள் அங்கே அரசு பொறுப்பில் வைக்கப்பட வேண்டும். ஏன் என்றால், ஒரு கூட்டமைப்பு அங்கே வந்திருக்கிறது. இதற்குப் பிறகு மீண்டும் அங்கே ஒரு சார்புடைய போலீஸ் துறை அதிகாரிகள் இருப்பார்கள் என்று சொல்லாமல் இதே நிலை நீடிக்குமோ என்ற அச்சம் எங்களுக்கு எல்லாம் ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் சில பேர், சமுதாயத்தில் ஏற்றம்பெற்ற சில பேர் ஒரு பிரபல கிரிமினல் வழக்கறிஞர் கருணைதான் கடவுளினுடைய வடிவம் என்று உலகத்திற்கு உணர்த்திய வள்ளலார் பெயரைச் சொல்கிற அவருடைய தத்துவத்தைப் பரப்புகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு பெரும் தரம் இப்படிப்பட்டவர்கள் பகிரங்கமாக இப்படி தான் வாழவேண்டும்; அப்படி வாழவேண்டுமென்று சொன்னால் இவர்களை எல்லாம் அழிக்க வேண்டும் என்று பேசப்படுற பேச்சுகளுக்கு எப்படி தான் போலீஸ் அனுமதி அளிக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. அண்மையில் திண்டுக்கல்லில் கூட முஸ்லீம் மார்க்க சம்பந்தமான ஒரு மாநாடு நடந்தது. டபிள்யூ. இசட். இயக்கம். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே மீண்டும் ஒரு முறை பேசப் போகிறீர்கள். எனவே, இதைச் சீக்கிரமாக முடித்தால் நன்றாக இருக்கும்.

திரு. எம். அப்துல் லத்திப்: அதற்கு அனுமதி கொடுக்கா விட்டால் பரவாயில்லை. எனக்கு இது தான் முக்கியம். பேச வேண்டாம் என்று சொன்னால் நான் பேசவில்லை. ஆகவே, அந்த திண்டுக்கல் மாநாட்டின்போது இவ்வளவு பகிரங்கமாக

1990 மார்ச் 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

ஒரு சமுதாயத்திற்கு விரோதமாக துவேஷ வார்த்தைகள், சுவரொட்டிகள் இவைகள் எல்லாம் ஏற்புடையது தானா? போலீஸ் அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எங்களுக்கு எல்லாம் மிகுந்த மயக்கமாகவும் அச்சமாகவும் இருந்து கொண்டிருக்கிறது. உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளாவிட்டால் இந்த கதை தொடரும். ஏற்கெனவே அக்கீம் கொலை நடந்தது, இந்த அவையில் எல்லோரும் பேசினார்கள். அதற்குப் பிறகு ஒரு முஸ்லீம் அல்லாத ஒரு சகோதரர் கொல்லப்பட்ட நேரத்தில் எல்லோருமே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துப் பேசினார்கள். இப்போது போயிருப்பது சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவன். ஆனால், நான் மட்டும் தான் பேசிக் கொண்டிருக்கிறேன். எனவே, இந்த நிலை நீடித்துக்கொண்டு போனால் நான் அதிகமாக விபரங்களுக்குள் போக விரும்பவில்லை. காரணத்தோடு தான். நான் அந்த விபரங்களுக்குள் போக விரும்பவில்லை. இதை நான் சபையில் எழுப்பும்போது கூட அதை நான் எழுப்புவதா? அது தேவைதானா? அதனுடைய விளைவு என்னவாக இருக்கும் என்ற மிகுந்த தயக்கத்தோடு வேறு வழியில்லாமல் இதை நான் எழுப்புகிறேன். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுவது ஒன்று உடனடியாக கோவை மாவட்டத்தில் இப்போது இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகளை மாற்றி ஆகவேண்டும். நடுநிலையில் இருப்பவர்களை அங்கே நியமிக்க வேண்டும். அதுவும், குறிப்பாக இரகசியத் துறையில் இருக்கக்கூடிய போலீஸ் அதிகாரிகள் பாரபட்சமாக பகிரங்கமாக நடந்து கொள்கிறார்கள் என்பது இங்கே நமக்குத் தெரியப்படுத்தி இருக்கிற குற்றச்சாட்டு. இங்கே இருக்கிற அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட இருக்கிறார்கள். அவர்களைக் கூட நீங்கள் கேட்டு பார்க்கலாம் எனவே, நடுநிலையோடு இருப்பவர்கள் அனைவரும் அவர்களை மாற்றவேண்டுமென்று விரும்புகிறார்கள். அது மட்டும் அல்லாமல் சில பெரிய மனிதர்கள் இதில் ஈடுபட்டு பகிரங்கமாக கடை வீதியில் பிரச்சாரம் செய்கிறார்கள். நாட்டை விட்டு விரட்ட வேண்டுமென்று பேசுகிறார்கள். இவர்களை எல்லாம் ஏதோ ஒரு நாட்டுக்கு ஓட்ட வேண்டும் என்று அவர்களை எல்லாம் குறிப்பிட்டு பேசுகிறார்கள்.

அதுமட்டும் அல்ல, இவர்களை ஒழிக்கின்ற வரையில் எனக்கு ஓய்வு இல்லை என்று ஒரு வழக்கறிஞர் பகிங்கரமாக அமைதிக் கூட்டம் என்று சொல்லப்படுகிற அந்த அமைதிக் கூட்டத்திலேயே பேசியிருக்கிறார்கள். வெளியே வந்து நிருபர்களிடம் பேசியிருக்கிறார்கள். இதை அரசு அனுமதிக்குமானால் அதுவும் ஓரளவு உணர்ச்சிக்கு மிக லேசாக ஆட்படக்கூடிய பொது மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதனால், இதனுடைய கலவரத்தால் கொந்தளிப்பால் வளாகம் விரியக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1990 மார்ச் 23

10-25 மணி

வேண்டும். இதற்குக்கூட பத்திரிகை செய்தி என்ன சொல்கிறது என்றால், 62 பேர் சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். தங்களுடைய சமுதாயத்தைச் சார்ந்த ஒரு இளைஞன் கொல்லப் பட்டான் என்பதற்காக தங்களுடைய உணர்வை வெளிப்படுத்திய காரணத்திற்காக அந்த 62 பேர் கைது செய்யப்பட்டார்கள். ஆனால், அதே பத்திரிகையிலே சொல்லப்படுகிறது, இதுவரை யிலே கொலையாளியைக் கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. கொலையாளி கண்டுபிடிக்கப்படவில்லை, ஆனால், தங்களுடைய வீராப்பையெல்லாம், போலீஸ்காரர்கள் தங்களுடைய வீராப்பையெல்லாம் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 62 பேரை கைது செய்வதிலே காட்டி இருக்கிறார்களே தவிர, கொலையாளியைக் கண்டுபிடிப்பதிலே காட்டவில்லை. எனவே, எங்களுடைய கொந்தளிப்பை இங்கே வெளியிடுவதைத் தவிர வேறு வழியில்லை. இத்தகைய சக்திகளை ஒடுக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும். அது மட்டுமல்லாமல், சர்வ கட்சிக் கூட்டத்தை இது தொடர்பாக கூட்டுவதாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். அதைக்கூட விரைந்து கூட்டவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, எங்களைப் பொறுத்தவரையில் சமுதாய சாத்வீகத்தை நாங்கள் விரும்புகிறவர்கள். சவுஜன்யமாக வாழ விரும்புகிறவர் கள். ஆனால், ஒரு கொலை நடந்தால் கூட அதுபற்றி பேசக் கூடாது என்று மிகப் பரிதாபகரமான நிலைக்கு நாங்கள் ஆளாகி யிருக்கிறோம். உருதிலே ஒரு கவிதை சொல்வார்கள். நான் இந்த இடத்திலே அதனுடைய பொருளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் கொலை செய்கிறார்கள், அதைப் பற்றி யாரும் பேசக்கூடாது. ஆனால், நான் பெருமூச்சு விட் டாலும் அது குற்றமாகக் கருதப்படுகிறது என்ற அளவுக்கு நாட் டிலே நிலைமை இருக்கிறது. எனவே, ''அம் ஆகர்தி கர்த்திங் ஹே; தோ ஹோ ஜாதே ஹே பஜூநாம்; ஹோ அர்த்திலிபி கர்த்திங் ஹே; தோ சர்ச்சா நஹி ஹோதர்த்தா'' என்று சொல் லக்கூடிய அளவுக்கு அவர்கள் அர்த்தினி செய்தாலும் அதைப் பற்றி பேசுவதற்கு ஆளில்லை. நாங்கள் பரிதாபகரமான நிலையிலே இருப்பவர்கள்; பெருமூச்சு விட்டாலும் அதைப்பற்றி குற்றம் கண்டுபிடிக்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார் கள் என்று சொல்லப்படுகிற அந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அந்தச் சூழ்நிலையில் தமிழகம் இல்லா விட்டாலும் அந்தச் சூழ்நிலைக்கு வரவேண்டுமென்று, கொண்டு செல்லவேண்டுமென்று சில அராஜக சக்திகள் வேலை செய்து கொண்டிருக்கின்றன. அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண் டும். எங்களுக்கும் மானம் உண்டு; எங்களுக்கு மரியாதை உண்டு. எங்களுக்கும் கொள்கை உண்டு. நாங்களும் வாழ விரும்புகிறோம். மற்றவர்களும் வாழவேண்டுமென்று நினைக்கிறோம். ஆனால், நாங்கள் விரும்புகிற விதத்தில் வாழ

வேண்டாம் என்று சொன்னால் அந்த வாழ்வையே துச்சமாக மதிக்கிறோம். எனவே, வாழ்வதாக இருந்தால் மானத்தோடு வாழ்வோம்; மரியாதையோடு வாழ்வோம்; எங்களுடைய மதத்தைப் பின்பற்றி வாழ்வோம். அதைத் தடை செய்வோம் என்று யார் சொல்வதாக இருந்தாலும் அப்படிப் பேசுகின்ற அந்தச் சொல்லை நாங்கள் தடை செய்வோம், இல்லாவிட்டால் எங்களுடைய வாழ்வில், கடைசியில் நாங்கள் இறந்து விடுவோம் என்பதை மட்டும் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கும் நாட்டுக்கும் அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் உணர்ச்சிகரமாகப் பேசினார்கள். பேசும்போது நாங்களெல்லாம் பேசவில்லை என்று சொன்னார்கள். நாங்களும் அவருடைய கருத்திலே உடன்பாடோடு உணர்வோடு இருக்கிறோம். எங்களுக்கு தலைவர் அனுமதிக்கவில்லை. உங்களை அனுமதித்தார், ஆனாலும் உங்களுடைய உணர்வில் நாங்களும் உணர்வோடு இருக்கிறோம். நாங்களும் சிறுபான்மையைச் சேர்ந்தவர்கள்தான். அவர்களுடைய நலனில் நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய, லத்தீப் பிரிவினுடைய தலைவர் லத்தீப் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சனை குறித்து சில விவரங்களை நான் கூற வேண்டியவனாக இருக்கின்றேன். அவர் இங்கே குறைபட்டுக் கொண்டதற்குப் பதிலாக எதிர்க்கட்சித் தலைவர், சிறுபான்மையினரைப் பாதுகாப்பதில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது என்பதை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார். சில நிகழ்ச்சிகளை இதுபோன்ற மன்றங்களிலே பேசுகிற நேரத்தில் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட ஒரு நிகழ்ச்சியைவிட அது குறித்து விவாதங்கள் நடத்துகின்ற காரணத்தால் மேலும் பல நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிட அந்த விவாதங்கள், அதிலே எடுத்துக் கூறப்படுகின்ற கருத்துக்கள் காரணமாக ஆகிவிடக்கூடாது என்பதில் நாம் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், எந்தவொரு கட்சிக்கும் தமிழ்நாட்டிலே அமைதிக்குப் பங்கமான காரியங்கள் நடைபெற வேண்டுமென்கின்ற எண்ணம் இருக்காது என்றே நான் நம்புகின்றேன்.

எனவே, நாம் ஒரு விஷயத்தைக் குறித்து விமரிசிக்கிற நேரத்தில், அதன் காரணமாக சிறு பொறி, பெரும் தீயாக மாறுகின்ற நிலைமையை நாம் உருவாக்கிவிடக்கூடாது. இது கோவையிலே

நடைபெற்றிருக்கின்ற கொலை என்ற காரணத்தால் இதுவும் ஒருவேளை வகுப்புவாத அடிப்படையிலே நடைபெற்றிருக்கிற நிகழ்ச்சியாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகத்தின் அடிப்படையில் நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே ஆவேசத்தோடு பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். கொலை செய்யப்பட்ட இளைஞருடைய பெயர் நசீர். அவர் எந்த இயக்கத்திலும் ஈடுபாடு உடையவர் அல்ல என்று எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. லத்தீப் அவர்களுக்கு வேறு தகவல் கிடைத்திருந்தால் தனியாக என்னிடத்தில் சொன்னால் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

10-30 மணி

இதற்கு முன்பு இந்து முன்னணியைச் சார்ந்த வீரகணேஷ் என்ற ஒருவர் கொல்லப்பட்டபோது அதன் காரணமாக வெடித்த பல சம்பவங்கள், அது குறித்து இதே மாமன்றத்தில் எடுத்து வைக்கப்பட்ட கருத்துக்கள் எல்லாம் நம்முடைய அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன. அப்படி ஒரு சம்பவம் நடைபெற்ற காரணத்தால், இப்போது ஒரு முஸ்லீம் இளைஞன் கொலை செய்யப்பட்ட நேரத்தில் அது அந்தத் தரப்பினரால் இருக்கக்கூடுமோ என்ற ஐயப்பாடு எழுந்து, அது வதந்தியாகப் பரவி, பெரும் பிரச்சாரமாக ஆகிவிட்ட சூழ்நிலையில், கொலை செய்யப்பட்டவருடைய உடல் அடக்கம் செய்யப்படுவதற்காக எடுத்துச் செல்லப்பட்டபோது, பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன.

கொலை செய்தவனைப் போலீசார் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் அதற்காக பெருமூச்சு விட்டவனைக் கைது செய்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். கொலை செய்தவன் ஒளிந்திருக்கிற காரணத்தால், தெரியாத நேரத்தில் தெரியாத இடத்தில் யாருடைய கண்ணுக்கும் புலப்படாத சூழலில் கொலை செய்துவிட்ட காரணத்தால் பல்வேறு புலன் விசாரணைகள் மூலமாகத்தான் அவனைக் கண்டுபிடிக்க முடியும்.

ஆனால் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்றால், அந்தப் பிரேத ஊர்வலத்தின்போது போலீசாரின் கண்ணுக்கு நேராகவே, அந்த ஊர்வலத்தில் சென்றவர்கள் அமளியில் ஈடுபட்டு, கடைகளை மூடச்சொல்லி ரகளை செய்த காரணத்தாலும், கல்வீச்சில் ஈடுபட்ட காரணத்தாலும், அதன் காரணமாக பலர் காயமுற்ற காரணத்தாலும், அவைகளை நேரில் காணுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு ஏற்பட்ட காரணத்தால், அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கொலை செய்தவன் இன்னும் அவர்கள் கண்ணில் படவில்லை. யார்

என்று புலன் விசாரணையில் இன்னமும் முடிவாகவில்லை. அதற்காக அந்த வழக்கே பதிவு செய்யப்படாமல் விட்டு விடப்படவும் இல்லை. அதையொட்டி, ஒரு சமரச முடிவு காண்பதற்காக அதிகாரிகள் — மாவட்ட ஆட்சித் தலைவர்—கோவையிலே ஒரு அமைதிக் குழுவைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து இரு சாராரையும் அழைத்துப் பேசி, நடைபெற்ற சம்பவங்களுக்காக அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு முஸ்லீம் பெரியவர்கூட தன்னுடைய ஆழ்ந்த மனக் கவலையைத் தெரிவித்து இருசாராருமே இதை ஒரு வகுப்புவாதச் சம்பவம் என்ற பிரச்சாரத்தில் ஈடுபடுவதில்லை என்று சொல்லியிருப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்.

ஒரு கிருஸ்தவ இளைஞர் இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகிவிட்டால் அது கிருஸ்தவ சமுதாயத்திற்கே எதிர்ப்பான ஒரு காரியம் என்று எண்ணுவதோ அல்லது ஒரு இந்து இளைஞன் இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு ஆளாகிவிட்டால் இந்து அல்லாத மற்ற மதத்தவர்கள் அல்லது முஸ்லீம்கள் அல்லது கிருஸ்தவர்கள் செய்த காரியம் என்று திடீரென்று முடிவுக்கு வருவதோ, அல்லது முஸ்லீம் இளைஞனுக்கு இப்படியொரு கதி ஏற்பட்டுவிட்டால், அதைச் செய்தவர் ஒரு இந்து இளைஞராகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வருவதோ — முடிவுக்கு வர நமக்கு உரிமை உண்டு என்றாலும் கூட, — அந்த முடிவு பல விரும்பத்தகாத வேறு பல முடிவுகளுக்கு நம்மை இழுத்துக் கொண்டு போய்விடக் கூடாது என்பதிலே மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லி, சிறுபான்மை மக்களுக்கு இங்கே உள்ள எல்லா உறுப்பினர்களும், குறிப்பாக இந்த அரசும் என்றைக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்ற உறுதியை அளித்து இந்த வகையில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(ஈ) சென்னை செம்பியம் காவல் நிலையத்தில் சில பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் பெண்கள் கொடுமைப் படுத்தப்படுவது தொடருகிறது என்பதைக் குறிக்கும் நிகழ்ச்சி ஒன்றை வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை நகரில் சி. 5. செம்பியம் காவல் நிலையத்தில் சமீபத்தில் மூன்று பெண்களை சட்டவிரோதமாகக் காவல் நிலையத்தில் கஸ்டடியில் வைத்து, மிருகத்தனமாக அவர்களைக் கொடுமைப் படுத்திய நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளது. கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டிய போலீசாரே